**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.4
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | குருசாமி | -- | |
| Father's Name | அருணாசலம் | Calling | ஓட்டுநர் |
| Village | திருவில்லிபுத்தூர் | Religion | இந்து |
| Taluk | திருவில்லிபுத்தூர் | Age | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of July 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன கல்யாண குமார் எனது மகன் ஆவார். கடந்த 07.06.2018 ம் தேதி காலை 09.00 மணியளவில் நான் டிராக்டர் ஓட்டிக்கொண்டிருந்தபோது ஒரு பையன் வந்து செண்பகதோப்பு செல்லும் வழியில் எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார். கேள்விபட்டவுடன் நான் எனது வீட்டிற்கு சென்றேன். அப்போது எனது மகனை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக கூறினார்கள். உடனே நான் பேருந்தில் ஏறி மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த எனது மகனை பார்த்தேன். அப்போது என்னோடு பேசினார். எனது மகனும் இன்னும் இருவரும் சேர்ந்து எனது மகன் கல்யாணகுமார் பெயரிலுள்ள இருசக்கர வாகனத்தில் செண்பகதோப்பிற்கு குளிக்க சென்றுவிட்டு திரும்ப வரும்போது எதிரே வந்த டிராக்டர் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக கூறினார்கள். எனது மகன் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 10 நாட்கள் வரை சிகிச்சையிலிருந்தார். அதன் பிறகு சிகிச்சை பலனளிக்காமல் இறந்துவிட்டார். பின்னர் பிரேத பரிசோதனை முடிந்து எனது மகனின் பிரேதத்தை வாங்கி வந்து திருவில்லிபுத்தூரில் அடக்கம் செய்தோம். இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே ஒரு மதுரைக்கார பையன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இன்னும் ஒரு பையன் காயமடைந்துவிட்டதாக சொன்னார்கள். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

எனது சொந்த ஊர் திருவில்லிபுத்தூர். எனது ஊரிலிருந்து செண்பகதோப்பு 15 கி.மீ சுமார் அரைமணிநேரம் ஆகும். எனது மகன் செண்பகதோப்பிற்கு குளிப்பதற்காக சென்றார். அவர் அவ்வாறு செண்பகதோப்பிற்கு குளிக்க போனது இந்த விபத்து நடந்த பின்னர்தான் எனக்கே தெரியவந்தது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. செண்பகதோப்பு ஒரு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி. அதில் குளிப்பதற்கு குறிப்பிட்ட நேரம் அனுமதிப்பார்கள். விபத்து எந்த நேரத்தில் நடந்தது என்று எனக்கு தெரியாது. செண்பகதோப்பிற்கு செலுபவர்கள் குளித்து விட்டு மகிழ்ச்சியாக இருப்பதற்காகத்தான் செல்வார்கள். குளித்துவிட்டு விளையாடிக்கொண்டு வருவார்கள் என்றால் சரியல்ல. எனது மகனோடு சென்ற நபர்கள் யார் யார் என்று தெரியாது. இந்த விபத்திற்கு பின்னரும் அவர்கள் யார் என்று தெரியாது. இவ்வழக்கில் புகார் யார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது மகனும் அவனது நண்பர்களும் குடித்துவிட்டு சாலை விதிகளுக்கு மாறாக 3 பேர் ஒரே இருசக்கர வாகனத்தில் வந்ததால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 19th day of July 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**